முருகப்பெருமான் துணை

**மகான் கலிய நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.07.2022, சனிக்கிழமை

1. தவபலமிக்க வரங்கள் தன்னை
தரணிகாக்க வேண்டி இனிதே
அவனியெங்கும் தருமம் ஆக்கி
அன்னதான வழிகாட்டும் அரங்கா
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது மிதுன திங்கள்
வரங்களென இருபானைதிகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 25 நாள், 09.07.2022 சனிக்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே கலிய நாயனாரும்
தரணியோர் ஞானம் பெற உரைப்பேன்
மண்ணுலகில் தருமம் தழைக்க
மாதவசி  காட்டும் அன்னதான சேவை
4. சேவையை கலியுக மக்கள்
செகமெங்கும் விரிவு செய்து
சேவைதனை பெருக்கி வர
செப்பிடுவேன் மக்களிடை மன மாற்றம்
5. மாற்றம் தயவே வடிவாகியே
மண்ணுலகில் தரும பலமாகி
ஆற்றல் நல்வழி பெருகும்
அனைத்திலும் சத்தியம் நிலைக்கும்
6. நிலைக்கவே ஞானிகள் பூசை
நித்தம் மக்கள் செய்துவர
பிழையற வாழ்க்கை சிறந்து
பின்னடைவு எதிலும் காணா
7. காணா வளர்ச்சி மாற்றம்
கண்டு கலியுகம் தன்னில்
ஞான பலம் நாளும் கூடி
ஞானவான்கள் எண்ணிக்கை பெருகி
8. பெருகியே அரங்கன் சேவை
பெருமளவில் வளர்ந்து சிறந்து
முருகப் பெருமான் தயவு
முழுமைபட மக்களை நோக்கி
9. நோக்கி சூட்சும ஆற்றலாக
நிலவுலகம் எங்கும் பரவிட
தேக்கமின்றி தீவினை விலகும்
தேசிகன் தெய்வநெறி தழைத்து

10. தழைத்துமே மக்கள் எல்லாம்
தருமவான் ஞானவான் எனும்
பிழையிலா ஞான தேசிகனின்
பிரணவ சக்திக்குள் வந்து

11. வந்து உலக மாற்றம் தனை
வகையாக செய்து முடிப்பர்
செந்தூரரான் ஞான ஆட்சிதருவர்
செப்பிய அருளாசி முற்றே

–சுபம்–